உ

சிவமயம்



# திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி

அவர்களின் சிவபதப்பேற்றின்

# நினைவு மலர்


12-08-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திரு. இளையதம்பி நல்லதம்பி அவர்கள்

| | | |
|---|---|---|
| **தோற்றம்:** | | **மறைவு:** |
| **16-09-1915** | | **04-03-1964** |

## திதி நாள்

மாசித் திங்கள் அபரபக்க ஷஷ்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள்

தோற்றம்:
26-06-1921

மறைவு:
12-07-2000

## திதி நாள் செப்பல்

விக்கிரமத் தாண்டானி விளங்கேகா தசிப்பூர்வம்
தக்கதெனக் கண்டிறைதாள் சார்ந்தாள் - ஒக்கல்மிகு
உறவோடூர் ஓம்பும் உயர்நல்ல தம்பிவலக்
கரமாய மகேஸ்வரி காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வரலாறு

திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள் ஈழநாட்டின் வடபாலமைந்து கல்வி வள்மும் கலைவளமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற யாழ்ப்பாணத்து நாரந்தனை எனுமிடத்தில் 1921ம் ஆண்டு யூன் மாதம் 26ம் திகதியன்று பிறந்தார்.

தந்தை கந்தப்பு கனசபையினதும், தாய் நாகமீனாட்சியினதும் அரவணைப்பிலும், சகோதர சகோதரியர் கந்தசாமி காலம் சென்ற நாகலிங்கம், மனோன்மணி, யோகாம்பிகை, ராஜேஸ்வரி, தர்மரெத்தினம் ஆகியோருடனும் தனது இளம்பிராயத்தை இனிதே கழித்தார்.

அன்னார் 1944ம் ஆண்டு சுருவிலைச் சேர்ந்த இளையதம்பி நல்லதம்பி அவர்களை மணம் புரிந்து நீர்கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டு இல்லறம் எனும் நல்லறத்தினை உற்றாரும் ஊராரும் புகழும் வண்ணம் சீரும் சிறப்புமாக நடாத்தினார். அவரது கணவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்து ஆற்றிய சமூகப் பணிக்கு மிக்க உறுதுணையாக இருந்தார். விருந்தோம்பலில் அவருக்கு நிகர் அவரே!

1964ம் ஆண்டு எதிர்பாராதவாறு இருதய நோயினால் தன் கணவனை இழந்த போதிலும் மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள் தனது அயராத உழைப்பினாலும், சகோதர, சகோதரியரினதும், மைத்துனர்களினதும் ஒத்தாசையுடனும், தன் மக்களை "ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற பொன்மொழிக்கு ஏற்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டியுள்ளார். அவரின் முதல் மூன்று மக்கள் சந்திரா, ஹரி, பரந்தா ஆகியோர் இங்கிலாந்தையும் இளைய மகன் குமார் கொழும்பையும் வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தாலும் திருமதி. நல்லதம்பி அவர்களின் மக்களும் மருமக்களும் தங்கள் அன்றாட வாழ்க்கையிலும் கூட அம்மாவையே தங்கள் குருவாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு அவருடன் மிக மிக நெருங்கிய தொடர்புடன் இருந்தார்கள்.

திருமதி. நல்லதம்பி அவர்கள் சமய கலாச்சார நெறிகளில் மிக்க ஈடுபாடு உடையவர். அவர் தன் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரது இன்ப துன்பங்களிலும் பங்கு கொண்டு வழிகாட்டியாக விளங்கினார். அவர் அடிக்கடி எவர்க்கும் கூறும் அறிவுரை

"குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை"

"உன்னுடைய கடமைகளைச் செய்"

"உரிமைகள் கேட்காமலே உடன் வரும்"

என்பதாகும்,

கடந்த 10 ஆண்டுகளாகத் தனது இளையமகன் குடும்பத்தினருடன் கொழும்பில் வாழ்ந்த திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள் அண்மையில் எலும்பு முறிவினால் இடைக்கிடை சிகிச்சை பெற்று வந்தார். பலமுறை லண்டன் சென்று திரும்பிய அவர் லண்டனில் மக்களுடன் வாழ அடிக்கடி அழைப்புகள் பல இருந்தும் தன் அண்ணனைப் பராமரிக்கும் கடமையையே கண்ணாகக் கருதி வாழ்ந்தார்.

அவரின் இழப்பு அவரின் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அவரைச் சார்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்குமே ஒரு பேரிழப்பாகும்.

'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்ற வாக்கிற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டிய திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் மகேஸ்வரி அக்கா

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவனின் வாக்குக்கு இலக்கணம் அமைத் தாற்போல்த் தோன்றி அண்மையில் அமரத்துவம் அடைந்த திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அம்மையாரை 45 வருட காலமாக எனக்குத் தெரியும்.

நாரந்தனை என்ற கிராமத்திற் பிறந்த அம்மையார் சுருவில் என்ற கிராமத்திற் பிறந்த திரு. நல்லதம்பி அவர் களை திருமணம் செய்து நீர்கொழும்பு நகரில் சீரும் சிறப்பு மாக வாழ்ந்து வந்தமை யாவரும் அறிந்தவோர்விடயம்.

பல்லின மக்கள் செறிந்து வாழும் நீர்கொழும்பு நகரில் பிரபல வர்த்தகரொருவராகத் திகழ்ந்த இந்த அம்மையாரின் அன்புக் கணவர் திரு. நல்லதம்பி அவர்களின் புகழோங்கி யிருந்தமைக்கான காரணம் வர்த்தகத்துறையைவிட அவர் ஈடுபட்டிருந்த சமூகத் தொண்டுகளே. பல்வேறு சமூகத் தொண்டுகளில் ஈடுபாடுடைய பல பெரியவர்கள் அடிக்கடி சமூகப் பணிகள் தொடர்பாக அளவளாவுதை நாம் நேரிற் கண்டிருக்கின்றோம். சுருவிலிற் பிறந்த தமிழ் மகன் ஒருவனது இறுதிக் கிரியைகள் நீர்கொழும்பு நகரில் நடைபெற்ற வேளையில் இன மத வேறுபாடின்றி வெள்ளம் போல் மக்கள் திரண்டு அஞ்சலி செய்தமை இக்குடும்பத் தினரின் பொதுப் பணியின் பிரதிபலிக்காகும்.

திரு. நல்லதம்பி அவர்களின் சமூகத் தொண்டுக் குப் பக்கபலமாக விளங்கியவர் அவரது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. மகேஸ்வரி என்பது யாவரும் அறிந்த உண்மை. கணவன் ஆற்றும் சமூகப் பணிகளுக்கு மனைவி, மக்கள் ஒத்துழைப்பு வழங்கியதோடு வீட்டுக்கு வருபவர்களை இன்முகங்காட்டி உபசரித்து விருந்தோம்பலிலும் தலை சிறந்து விளங்கினார்.

இவ்வாறான உயர்ந்து பண்புகள் இந்த அம்மையாரிடம் காணப்பட்டமைக்கு அம்மையாரின் பெற்றோர்களது நற்பண்பும் வழிகாட்டலும் மாத்திரமல்லாது புகுந்த வீட்டினரின் உயர் பண்புகளும் துணையாக நின்றன. அம்மையாரின் 42வது வயதில் சமூகப் பணிகள் உட்படச் சகல துறைகளிலும் புகழ் உச்ச நிலையில் இருந்த அம்மை யாரது கணவன் திரு. நல்லதம்பி அவர்களைக் காலன் கவர்ந்து கொண்டான். வாழ்க்கையை அனுபவிக்கவேண்டிய வயதில் பெண்ணொருத்தி தன் கணவனை இழப்பதென்பது தாங்கமுடியாதவோர் துயரம் என்பதை எவரும் அறிவர்.

இரண்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளுமாக நான்கு பிள்ளைகளுக்கும் கல்வியூட்டி அவர்களது சகல நலன்களையும் கவனிக்க வேண்டியது மாத்திரமல்லாது கணவரின் வர்த்தக நிறுவனத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு மகேஸ்வரி அக்காவை வந்தடைந்தது. அம்மையாரின் சகோதரர்களும் கணவரின் இனத்தவர்களும் உதவி ஒத்தாசை வழங்கினாலும் அம்மையார் ஆற்றவேண்டிய பணி அதிகமாகவிருந்தது.

பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற கல்வியை வழங்கி அவரவர்க்குத் தகுந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து நான்கு பிள்ளைகளையும் சமுதாயத்தில் நன்கு பிரகாசிக்கும் வகையில் அமர்த்தியிருப்பது குடும்பத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான கட்டத்தில் தலைவனை இழந்தபோதும், தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாவும் இருந்து பிள்ளைகளுக்கு ஆற்றவேண்டிய அத்தனை கடமைகளையும் எவ்விதக் குறையுமின்றி ஆற்றியிருப்பதிலிருந்து அம்மையாரின் நிர்வாகத் திறமை எவ்வாறானது என்பதை எம்மாற் புரிந்துகொள்ள முடியும்.

அம்மையார் வெளிப்படையாகச் சமயப் பணிகளில் ஈடுபடாவிட்டாலும் தான் மட்டுமல்லாது தனது பிள்ளைகளையும் சைவ சமயக் கோட்பாடுகளுக்கிணங்க நெறிப்படுத்தியுள்ளார். தன் குடும்பம் என்று மாத்திரமல்லாது தான் சார்ந்த இனம் தொடர்பாகவும் அம்மையார் அதிக ஈடுபாடுடையவராக விளங்கியதோடு தமிழ் மக்களின் அவலங்கள் தொடர்பாகவும் அதிக அக்கறை செலுத்தினார் என்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது.

இந்த அம்மையாரின் ஆற்றல் தொடர்பாகவும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. பாண்டித்தியம் பெற்ற அம்மையாரின் சகோதரர்கள் மாத்திரமல்லாது இனத்தவர்களும் நண்பர்களும் கூட பல சந்தர்ப்பங்களில் ஆலோசனை பெறுவதற்காக அம்மையாரை அணுகுவதுண்டு. அன்னார் உயர்கல்வி கற்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காத போதிலும் அன்னாரின் வாதத் திறமையும் பிரச்சினைகளை அணுகும் விதமும் பிரபல்யமானதோர் சட்டத்தரணி போலானதாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனப்பாங்கு அம்மையாரிடம் என்றும் இருந்ததில்லை. தனது மனதில் சரியெனப்பட்டது எதுவோ தயங்காது அதனைக் கூறிவிடுவது அவரது சுபாவம். குடும்ப நன்மைக்காகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் நலன் கருதியும் தனது நிலைப்பாட்டை புத்தி மதியாக எடுத்துரைப்பதும் இராஜதந்திர ரீதியில் எதையும் மறையாது உள்ளதை உள்ளபடியே எடுத்துக் கூறுவதும் அம்மையார் கடைப்பிடித்த வழிவகையாகும். நான் தவறு விட்டதாகக் கூட இந்த அம்மையார் சில தடவைகள் நேரடியாக எனக்குச் சொல்லியுள்ளார். எனது வாதங்களை அன்னாருக்குச் சமர்ப்பித்ததும் சரியென உணர்ந்த வேளைகளில் எதிர்வாதம் புரியாதிருப்பார். அதன் மூலம் அன்னார் நீதிக்கும் நேர்மைக்கும் தலை வணங்கும் திறனை வெளிப்படுத்தியது. இவ்வாறான நேர்மையான கொள்கைகளை மரணமாகும் வரையிலும் அன்னார் கடைப்பிடித்தொழுகினார்.

நம் சமூகத்தில் அனேகர் மேடைகளில் தியாகம் தொடர்பாக மணிக்கணக்காகப் பேசினாலும், அக் கீதா உபதேசங்களை அவர்கள் செய்கையிற் காட்டுவது அரிது. இந்த அம்மையார் தியாகம் தொடர்பாக உபதேசம் செய்யா விட்டாலும் அவர் செய்த தியாகம் மதிப்பிட முடியாதது. அவரின் தியாக உணர்வை மதித்து அன்னாருக்கு நாம் தலை வணங்குகின்றோம். அம்மையாரின் நான்கு பிள்ளை களில் மூவர் லண்டனில் உயர் பதவிகளில் உள்ளனர். அம்மையாரை நன்கு பராமரிக்க வேண்டும் என்ற அவாவில் அன்னாரின் பெண் பிள்ளைகள் அம்மையாரை லண்டனுக்கு அழைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம், நோய்வாய்ப்பட்டிருக்கும் திருமணம் செய்யாத தனது மூத்த சகோதரரின் நலனுக்கு உதவி ஒத்தாசை புரியவேண்டுமென்ற உள்ளுணர்வில் தனது பிள்ளைகளோடு இருக்க வேண்டுமென்ற ஆசையை வெளிக்காட்டாது பிள்ளைகளின் மனம் நோகாத வகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது அழைப்புக்களை இராஜதந்திரமான முறையில் நிராகரித்து விட்டார்.

நமது சமூகத்தில் இவ்வாறான தியாகச் செம்மல்களை விரல் விட்டு எண்ணலாம். இவ்வாறான தியாக சிந்தனை அன்னாரின் தந்தையாரிடமிருந்து வந்ததோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் அன்னாரின் தந்தையின் சகோதரன் நாரந்தனையில் இளவயதில் அமரத்துவம் அடைந்தபோது, அவரின் எட்டு பிள்ளைகளை யும் மனைவியையும் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் தானே எடுத்துக் கொண்டார். அக்காலகட்டத்தில் அது வோர் பாரிய பணியாகும். அவ்வேளையில் அம்மையாரின் தந்தையார் "இனிமேல் இரு பானைகளில் அரிசி வேகாமல் ஒரே பானையில் தான் அரிசி வேகவேண்டும்" எனக் கூறியமை ஏனையோரின் மனங்களைக் கசிய வைத்தது. தந்தையாரிடம் காணப்பட்ட அதே தியாக சிந்தனை மூத்த மகளான மகேஸ்வரி அக்காவிடமும் காணப்படுவது இது வோர் பரம்பரைச் சொத்தோ என்று எண்ணத் தோன்று கின்றது.

இந்தத் தியாக சிந்தனை பரம்பரைச் சொத்தை அம்மையார் தமது மக்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டார் என்பது எமது கணிப்பு.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இ. நடராஜா

முன்னாள் ஐ. நா. சர்வதேச ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகம்

*– தில்லை சிவன் சொல்லியவை –*

வெள்முத் தெற்றும் கடலலை மீதேறி
வீசுந்தென்றல் சுகந்தர உடல்வளம்
கொள்ளும்நாரந் தனையூரிற் பிறந்தொளி
குலவுஞ் சுருவிலூர்க் கோமகன் கல்வியில்
வல்லநல்ல தம்பியை வதுவையில்
வரித்த நங்கை மகேஸ்வரி அருளொடு
செல்வம் நீடிய செல்வன் அடியினை
சேரவெண்ணி விண் சென்றனள்; பாடுவோம். 1

ஓங்கு கல்வியும் செல்வமும் உடையவேள்
உயர்குடித் தோன்றல் கனக சபையிளம்
மாங்குயில்நாக மீனாட்சிப் பொன்றனை
மணத்தலால் வந்துதித்த மகார்களுள்
பூங்குழலெழிற் பூவை மகேஸ்வரி
புனிதவேள் நல்ல தம்பியை மணத்தறம்
தாங்கித் தானீன்ற மக்கள் அறிவுசால்
தன்மை கண்டு தழைத்திருந் தவரன்றோ! 2

நீர்கொழும்பில் வர்த்தகம் சிறப்பொடு
நிகழவாங்குள நிறைவொடு பொதுப்பணி
ஆர்வமுந்தப் பற்பல தொண்டுகள்
ஆற்றிய நல்லார்க் கேற்றவோர் வலக்கரம்
போலநின்றும் தம்மரும் பிள்ளைகள்
போற்றுங் கல்வியோ டேனைத் துறைகளில்
சாலவோங்க உழைத்தும் உலகிற்குத்
தண்ணிழல் ஆகித் தாங்கியும் உயர்ந்தவள். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் தெய்வம் கற்பெனுந் திண்மையள்,
பேதைமைமடம் அச்சம் அடங்கியிவ்
மண்ணின் மாதர்க்கோர் காட்டென, கொண்டவன்
மனதறிந்த துணைவி பிள்ளைகட்(கு)
அன்னை, யுற்றார் ஊர்க்குப காரியாம்,
அரிய கல்வி ஞானச் செருக்குடன்
உண்மைத் தொண்டால் உயர்ந்து இலக்குவன்
உவக்கும் ஊர்மிளை அன்னாள் மகேஸ்வரி. 4

சந்திரா, ஹரி, பரந்தா, வொடுகுமார்
சால்புல மக்கள் நால்வரும் இன்பொடு
இந்திரப் போகம் ஆளக்கண் டுவைகயில்
இறும்பூதெய்திய மகேஸ்வரி உலகினில்
வந்த வாழ்வுச்சுகம் நனி தெவிட்டப்பின்
வாழ்வு வேண்டி இறைமலர்த் தாளருட்
பந்தம் ஈர்கவின் போந்தனள்
பதைத்தழுதென்ன! யாமுவித் தகையரே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் குல மாதரசி

திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - தம்மைச் சார்ந்தோர் அனைவருக்கும் ஓர் கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டி அமரத்துவம் அடைந்துள்ளார். அவரது இளைய சகோதரர், சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பேராசிரியராக இருக்கும் Dr. க. தர்மரெத்தினம் அவர்களும் யானும் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் வரை, ஊர்காவற்றுறை சாந்த அந்தோனியார் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி கற்ற காலங்களில் அவர்களின் நாராந்தனை இல்லத்திற்கு அடிக்கடிச் செல்வதுண்டு. அதனால் மகேஸ்வரி அம்மையாரின் அருங்குணங்களை நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்காலத்திலேயே அன்னாரை மாதர் குலத்தின் ஓர் மாணிக்கம் என யான் கருதியது - இறுதிவரை மிகச்சரியாக இருந்தமை எனக்குப் பெரும் மன நிறைவைத் தருகின்றது.

மகேஸ்வரி அம்மையார் தாம் செய்த தவப்பேற்றினால் சுருவிலைச் சேர்ந்த திரு. இ. நல்லதம்பி அவர்களைத் தமது நாயகனாக அடையும் வாய்ப்பினைப் பெற்றார். நல்லதம்பி குடும்பத்தினர் நீர் கொழும்பில் நிரந்தரமாக வசித்தார்கள். வாய்மை, நேர்மை, அன்புடைமை, பண்புடைமை ஆகிய அருங்குணங்களின் ஊற்றாக மிளிர்ந்த அமரர் நல்லதம்பி அவர்கள் அங்கு வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் ஒப்புயர்வற்ற வழிகாட்டியாகவும் - அங்கு வாழ்ந்த பல்லின மக்களின் மதிப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியவராகவும் விளங்கியமை வரலாற்றில் இடம்பெற வேண்டியதொன்றாகும். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் முறையான ஆங்கிலக் கல்வியைப் பெற்று மலேசியாவில் பெரும் உத்தியோகம் வகித்த திரு. நல்லதம்பி அவர்கள் இலங்கை திரும்பி வந்து நீர்கொழும்பில் வசித்து - பரந்த அளவில் வணிகத் தொழிலை மேற்கொண்டிருந்தார். அறவழி தவறி பொருள் ஈட்டுவதை அறவே வெறுத்த திரு. நல்லதம்பி, கிடைக்கும் வருவாயின் பெரும்பகுதியை ஆதரவற்றோர் மேம்பாடு, ஆலயத் திருப்பணிகள், அறப் பணிகள் என எண்ணற்ற தருமங்களுக்காக வாரி வாரி வழங்கினார். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாது ஈந்த பெருமகனார் திரு. நல்லதம்பி அவர்கள்.

திரு. நல்லதம்பி அவர்களின் உயர்ச்சிக்கும் சீரிய பணிகளுக்கும் உற்ற உறுதுணையாக விளங்கிய மகேஸ்வரி அம்மையார் மாதர் குலத்திற்குப் பெருமை சேர்த்த மாதரசி என்றால் மிகையாகாது. பொறுமை, அடக்கம், இன்சொல், இன்முகம், விருந்தோம்பல் முதலான குணங்களின் உறைவிடமாக அன்னார் விளங்கினார். தமது கணவர் திரு. நல்லதம்பி அவர்கள் 1964 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்த பின்னரும் மகேஸ்வரி அம்மையார், உறுதி தளராது நீர்கொழும்பிலேயே வசித்துத் தமது பிள்ளைகளுக்கான பணிகளையும் அமரர் நல்லதம்பி விட்டுச்சென்ற பொதுப்பணிகளையும் தொடர்ந்து செய்து வந்தார். 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் நீர்கொழும்பையும் வெகுவாகப் பாதித்தது. இந்நிலையில் மகேஸ்வரி அம்மையார் தமது உற்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் வாழும் கொழும்புப் பகுதிக்கு வந்து வாழ்க்கையை ஆரம்பித்தார்.

அவரிடம் சிக்கல் மிகுந்த பிரச்சினைகளுக்கு ஆலோசனை கேட்கப் பலரும் செல்வதுண்டு. அவர் தரும் ஆலோசனைகள் நீதியின்பாற்பட்டதாகையால், கேட்போருக்கு மனநிறைவையும், அமைதியையும் தருபவையாக இருக்கும். எமது வாழ்நாளில் நாம் எம்மால் முடிந்த உதவிகளை எல்லாம் எம்மை நாடியோருக்கு நீதியாகச் செய்வதே எமது இலட்சியமாக இருக்கவேண்டும் என்பதை அடிக்கடி நினைவு கூருவார். உண்மையில் இக்காலத்தில் இத்தகைய ஒருவரை நாம் காண்பது மிகமிக அரிது. இறுதி நாட்கள்வரை அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை, நான் மிகுந்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

தந்தை, தாய் இருவரும் செய்த நற்பயனாக இன்று அவர்களின் மக்கள் நால்வரும் சமூகத்தில் நன்மணிகளாக மிளிர்வதை நாம் பெருமையுடன் காணுகிறோம்.

அமரர் திருமதி. மகேஸ்வரி நல்லதம்பி அவர்களின் ஆத்மா சந்தி அடைவதாக.

**சு. இராமகிருஷ்ணன்**

கொழும்பு. முன்னாள் நிறைவேற்றுப் பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.
அனைத்துலக லயன்ஸ் கழக, மாவட்டம் 306B,
முன்னாள் பிராந்தியத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grand Daughter Remembers...

Sometimes it's not the words that matter it's just the sound of your voice... I'd pick up the phone and talk, talk about nothing - whether the sun was shining, how I did in an exam etc. 'She just likes to hear your voice' Mum would say. Just before we'd say our goodbyes she'd ask:

"Are you happy?"

"Yes" I'd answer,

"If you're happy, then I'm happy" she'd say before giving me her love and saying goodbye.

Like the ripples in a pond she was the first drop and it would all come back to her, our thoughts, our dreams, her happiness depended on us. From little acorns oak trees grow.

I only knew her for 19 years, she has always been present in my life, I always loved her and never missed an opportunity to tell her, in words or in writing. I can close my eyes and picture a lady in a pale sari, looking at me through the most gentle, loving eyes, smiling softly, hair tied back away from her face so that when her lips smiled you could see that her eyes and her



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cheeks and her whole face smiled too.

A lady who loved milk chocolate, the shiny, purple wrappers were never far away! As a good friend said to me; 'we eat what gives us pleasure'.

I'll never forget the words we shared or the stories she told me; but now it's not the words that matter, it's not the words that I miss, it's the sound of her voice.

I will always be happy, I can promise her that I was born with a free spirit - happy is all I know how to be. Even now I can ask her;

"Are you happy?"

and through my heart I know the answer "yes" and feel her smile. My love eternally, God Bless.

Don't look at the past with regret or yearn for tomorrow, today is the most beautiful day there is. God bless all who read this. My grandma may have died, but she is one of the few that truly lived, let her live on in your hearts.

**Anushka Mithra**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Mrs. Maheswary Nallathamby

Maheswary Nallathamby was born as the eldest daughter of seven children to Mr. & Mrs. Kanagasabai of Naranthanai, Kayts. She grew up as a precious little sister for her two elder brothers and eight cousin brothers of her extended family until her three younger sisters and another brother appeared in the scene.

She was educated at the Little Flower Convent at Karampan, Kayts. Her formative years were spent with her parents and younger siblings at Naranthanai.

At the age of 23 she married Mr. E. Nallathamby of Suruvil, Kayts and made Negombo their home. After 20 years of blissful marriage and four children. (Chandra, Hari, Parantha and Kumar) sadly she was widowed. During her married life she was a tower of strength for her husband in his dedication to the Negombo community and to the young men's Hindu Association of Negombo.

She continued to live in Negombo with her younger son. She always said that she had the total support of her family and her husband's family in bringing up her children and in continuing the business in Negombo. She was grateful to them for their support.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Her house was a second home to many relatives at different stages of life and hence her children do not consider themselves as "FOUR" but there are "MORE".

The last 15 years of her life was spent in Colombo with her younger son and his family. Even though during her last few years she was physically in pain on and off due to bone fracture, she still would not give up her independent life style and was totally devoted to caring for her eldest brother.

Mrs. Maheswary Nallathamby has made several visits to England to be with her other children and their families. She had the gift of making everyone happy and welcome. This kept her in constant communication with her kith and kin around the world.

She will be remembered for her labour of love and constant concern for the welfare of the near and dear and all those who came to her.

The good and the noble never die. They continue to smell sweet and blossom in the dust.

Though death is poignant, memory is fragrant.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Periammamma

I have learnt so much from my periammamma. Her strength of character and mind, her individuality, her unwavering sense of duty and her sense of humour, all things that made her the very unique person that she was.

Many a time what she said would be an inspiration, a higher standared that suddenly seemed plausible.

Her genorosity and concern for others even when she herself was in pain was amazing.

In more ways than one she set an example.

With love and respect I can truthfully say that it was my privilege to have had her as my periammamma.

**Abirami**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

*- திருமூலர் -*

# தேவாரம்

## திருஞானசம்பந்தர்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## மாணிக்கவாசகர்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

# திருவிசைப்பா

## சேந்தனார்

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

### சேந்தனார்

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

### சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

# திருப்புகழ்

### அருணகிரிநாதர்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வர் தோத்திரம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி!
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி!
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி!
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி!

## திருஅருட்பா

அருட்ஜோதித் தெய்வமெனை
யாண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற
ஆனந்தத் தெய்வம்
பொருட்சாறு மறைகளெலாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம் உயர்
நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி
யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா
றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ்
சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம்.

*- இராமலிங்க சுவாமிகள்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

*- அருணகிரிநாதர் -*

# அபிராமியந்தாதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமிலா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

*- அபிராமிப்பட்டர் -*

# பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாய்ப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

*- பட்டினத்தடிகள் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்
## (சம்பந்தர்)

வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்து அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடுவடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடு
விடையேறு எங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னு
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்து என்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்ற தனோடும்.
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனுமாலும் மறையோடுதேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிராமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே ! 11

## போற்றித் திருத்தாண்டகம்

## (அப்பர்)

கற்றவர் களுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
யல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கமலி கடனஞ்ச முண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித் தோலாடைக் குழகா போற்றி
அங்கணனே யமரர்கடம் மிறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழுவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக வென்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தி போற்றி
யேழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 3

பொன்னியலு மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
யுலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறுமெய்க் கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
யுகப்பார் மனத்தென்று நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 9

பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகியுள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானேபோற்றி போற்றி. 11

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 12

மருவார் புரமூன்ற மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 14

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 15

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் கபளச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் ருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கூடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளிக்
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷ்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் கவசம்

## காசிப முனிவர்
## (தமிழில் கச்சியப்ப சுவாமிகள்)

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர் காக்க; தடவிழிகள்
பாலச் சந்திரனார் காக்க; 1

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க ;
நவில் சிபுகங் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க ;
அவிர் நகைதுன் முகர்காக்க ; அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச் சிந்தி தார்த்தர் காக்க; 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க; களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க ;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
யகன்காக்க : இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க: அகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க: 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க:
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரர்காக்க: விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க : சகனத்தை யல்லல்
உக்ககண பர்காக்க: ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க: 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க: இரு
பதம் ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க:
விரல்பதும அத்தர் காக்க:
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க:
கிழக்கினிற்புத் தீசர் காக்க: 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியில் சித்தீசர் காக்க;
உமாபுத்திரர் தென்திசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழ்உ தீசி
தக்கநிதி பர்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க; 6

ஏகதந்தர் பகல்முழுதும் காக்க; இர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திற த்தால்
வருந்துயரும், முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பா
சாங்குசர்தாம் விரைந்து காக்க; 7

மதி,ஞானம், தவம்,தானம், மானம்,ஒளி
புகழ்,குலம், வண்சரீரம், முற்றும்
பதிவான தனம், தானி யம்,கிரகம்
மனைவி, மைந்தர், பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க; 8

வென்றி, சீவிதங் கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுறா; முனிவரர்காள்; அறிமின்கள்:
யார் ஒருவர் ஓதினாலும்
அன்றவாங் கவர்தேகம் பிணியற; வச்
சிரதேகம் ஆகி மன்னும். 9

ஓம் கணபதி! ஓம் கணபதி! ஓம் கணபதி!

## குரு வழிபாடு

குருப்ரஹ்மா குருர்விஷ்ணுர் குருர்தேவோ மஹேஸ்வர:
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:

*பொருள்:- குருவே பிரம்மா, குருவே விஷ்ணு . குருவே மகேஸ்வரன், குருவே சாக்ஷாத் பரப்பிரமம். அந்தச் சற்குரு தேவரை நமஸ்கரிக்கின்றேன்.*

Guru Brahma Gurur Vishnu Gurur Devo Maheshwarah
Guruh Sakshat Param Brahma Tasmai Sri Gurave Namah

*Meaning:- Guru is Brahma, Guru is Vishnu, Guru is Siva. Guru is the Supreme Brahman Itself. Prostrations to that Guru.*


ஓம்

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி

அருள் தரவருவாய் குருநாதா
பர்த்தி புரீசா சாயி மஹேசா
அன்னையும் நீயே தந்தையும் நீயே
அருளும் நீயே அனைத்தும் நீயே
கதி நீயே என சரணமடைந்தோம்
பரிந்தெமைக் காப்பாய் பர்த்தி புரீசா
குரு நாதா சாயி குரு நாதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என் னுந் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின் றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே நுண்ணிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## பொருளுரை

1. **நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க**
"நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்க யாவற்றிற்கும் தலைவனாகிய சிவபெருமானது திருவடி வாழ்க.

2. **இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள் வாழ்க.**
கண் இமைக்கும் பொழுதுகூட, என் நெஞ்சை விட்டுவிலகாத, சிவபெருமானது திருவடி வாழ்க.

3. **கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க.**
திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டருளிய மிகச் சிறந்த பரமாச்சாரியரது திருவடி வாழ்க.

4. **ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க.**
முத்திநெறி கூறும் ஆகமத்தின் உட்பொருளாக நின்று, உயிர்களைத் தன்னிடத்து நெருங்கச் செய்யும் சிவபெருமானது திருவடிகள் வாழ்க.

5. **ஏகன் னநேக னிறைவ னடிவாழ்க.**
ஓருருவானவனும், பல் உருவானவனும் ஆகிய சிவபெருமானது திருவடி வாழ்க.

6. **வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.**
ஆணவ மலத்தின் ஆதிக்கத்தை அழித்து அடியேனை ஆட்கொண்டருளிய சிவபெருமானது திருவடி வெற்றி பெறுக.

7. **பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க.**
பிறவியை அழிக்கும், அழகிய சடாமுடியைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானது, உள்ளீடு பரல்கள் இடப்பட்ட வீரக் கழல்கள் பொருந்திய திருவடிகள் வெற்றி பெறுக.

8. **புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**
தன்மேல் அன்பில்லாதவர்க்குத் தூரத்தே உள்ளவனான சிவபெருமானது, பூப்போன்றதும் வீரக்கழல்கள் அணியப் பட்டதுமான, திருவடிகள் வெற்றி பெறுக.

9. **கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க.**
கைகள் குவித்து வணங்கும் அன்பர்களது உள்ளம் மகிழ்வதற்குக் காரணமாகிய, சிவபெருமானது திருவடி கள் வெற்றி பெறுக.

10. **சிரம்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க.**
தலை தாழ்த்தி வணங்குவாரை உயர்விக்கும் சிறப புடைய சிவபெருமானது திருவடிகள் வெற்றி பெறுக.

11. **ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி**
சிவபெருமானது திருவடிக்கு வணக்கம். எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குகின்ற எமது தந்தையாம் சிவபெருமானது திருவடிக்கு வணக்கம்.

12. **தேச னடிபோற்றி சிவன்சேவடி போற்றி**
ஞான ஒளிவீசும் வடிவுடைய பரமாச்சாரியாரது திருவ டிக்கு வணக்கம். சிவபெருமானது சிவந்த திருவடிக்கு வணக்கம்.

13. **நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி**
அடியார்களது அன்புக்குள் அகப்பட்டு நின்ற மலபந்த மில்லாத இறைவனது, திருவடிக்கு வணக்கம்.

14. **மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி**
மாயையினால் உண்டாகும் பிறவியை முற்றாக அழிக்கும் தலைவனான சிவபெருமானது திருவடிக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி**
சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில் பரமாச்சாரியாராய் எழுந்தருளி, நம்மை ஆட்கொண்டருளிய எமது கடவுளது திருவடிக்கு வணக்கம்.

16. **ஆராத வின்ப மருளுமலை போற்றி**
தெவிட்டாத இன்ப அருவியைத்தந்தருளும் மலை போன்ற, இறைவனுக்கு வணக்கம்.

17. **சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்**
சிவபெருமானாகிய இறைவன் என் மனதில் நீங்காது நின்ற காரணத்தால்.

18. **அவனரு ளாலே யவன்றாள் வணங்கி**
அச்சிவபெருமானது திருவருளினாலே, அச்சிவபெருமானது திருவடியை வணங்கி.

19. **சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை**
மனம் மகிழ்ச்சியடையும் படியாகச் சிவபுராணத்தினை

20. **முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்**
முந்தை வினை முழுதும் அழிந்து போக அடியேன் கூறுவேனாயினேன்.

21. **கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி**
நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான், திருப்பெருந்துறையில் பரமாச்சாரியராக வந்து சேர்ந்து, தன் அருள் நாட்டத்தை என்மேற் செலுத்த.

22. **எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி**
நினைத்தற்கும் எட்டாத அழகு பொருந்திய திருவடிகள் பூமியில் தாழ்ந்து.
(கண் நுதலான் எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி வந்து எய்தி, தன் கருணைக் கண்காட்ட அவன் சிவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, முந்தை வினை முழுதும் ஓய, சிந்தை, மகிழச் சிவபுராணம் தன்னை யான் உரைப்பன்.)

நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான், நினைத்தற்கு எட்டா அழகு பொருந்திய, வீரக்கழல் அணிந்த திரு வடிகள், பூமியில் தாழ்ந்து, திருப்பெருந்துறையினிடத்து பரமாச்சாரியாராக வலியவந்தருளி, தன் அருட் பார் வையை என்மேல் செலுத்தியதினால் அச்சிவபெருமான் என் மனதில் நீங்காது நிலைபெற்று விட, அவனது திருவருளினாலே அவனது திருவடிகளை வணங்கி, முற்பிறவி வினை முழுவதும் அழிந்து போகவும், மனம் மகிழ்ச்சியடையவும், சிவபுராணத்தினை யான் கூறுவேன்.)

23. **விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்**

விண்ணுலகம் முழுவதும் நிறைந்ததும், மண்ணுலகம் முழுவதும் நிறைந்ததும், அவற்றுக்கு அப்பாலுமாய் நிறைந்தவனே, பிரகாசம் விளங்குகின்ற ஒளிவடி வினனே.

24. **எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்**

மனத்தினால் நினைத்துப் பார்க்கவும் முடியாத வரை யறை அற்றவனே. நினது பெரிய சிறப்பினை.

25. **பொல்லாவினையேன் புகழுமா றொன்றறியேன்**

தீவினை உடையோனாகிய யான், நின் அருளாலன்றிப் புகழ்ந்துரைக்கும் வழி ஒன்றையும் அறிகிலேன்.

26. **புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**

புல் ஆகியும், பல்வகைப் பூண்டுகளாகியும், புழுவாகியும் மரமாகியும்.

27. **பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்**

பல்வகைப்பட்ட மிருகங்களாகியும், பல்வகைப் பறவை களாகியும். பாம்புகளாகியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. **கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
கல்லாகியும், மனிதராகியும், பேய்களாகியும் கணங்கள் ஆகியும்.

29. **வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
வலிய அசுரர் ஆகியும், முனிவர் ஆகியும், தேவர் ஆகியும்.

30. **செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்**
நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையிற் பொருள், இயங்கிற் பொருள் என்னும், இருவகைப் பொருள் களுள்ளே.

31. **எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம் பெருமான்**
நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையிற் பொருள், இயங்கிற் பொருள் என்னும், இருவகைப் பொருள் களுள்ளே.

32. **மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்**
உண்மையாகவே, உன் பொன்பொன்ற திருவடிகளைக் கண்டு, இப்பொழுது அப்பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை அடைந்துவிட்டேன்.

33. **உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற**
அடியேன் உய்யும் பொருட்டு, என் உள்ளத்துள் ஓம் என்னும் பிரவண உருவாய் நின்ற

34. **மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
மெய்யனே, மலபந்தம் அற்றவனே, இடபத்தை ஊர்ப வனே வேதங்கள்.

35. **ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே**
ஐயனே என அழைக்கவும், அவற்றுக்கெல்லாம் எட்டாது மேல் உயர்ந்தும், கீழ் ஆழ்ந்தும், பரந்தும் அமைந்த நுட்பமான பொருளாய் உள்ளவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. **வெய்யாய் தணியா யியமான னாம்விமலா**
ஞாயிற்றின் வெம்மையும், திங்களின் குளிர்ச்சியையும் உடையவனே, உலகை இயக்குகின்ற தலைவனாக விளங்குகின்ற நிர்மலனே,

37. **பொய்யா யின வெல்லாம் போயகல வந்தருளி**
பொய்யாக இருப்பவைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கும்படியாகக் குரு வடிவில் வந்து அருள் செய்து

38. **மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே**
மெய் அறிவாகி விளங்குகின்ற உண்மை ஒளியே

39. **எஞ்ஞான மிலாதே னின்பப் பெருமானே**
எவ்வகையான அறிவும் இல்லாதவனாகிய எனக்கு. இன்பத்தைத் தருகின்ற பெருமானே.

40. **அஞ்ஞானத் தன்னை யகல்விக்கு நல்லறிவே**
அறியாமையை நீங்கச் செய்யும் நல்ல அறிவுருவானவனே.

41. **ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்**
தோற்றமும், நிலைத்திருக்கும் கால அளவும், முடிவும் இல்லாதவனே எல்லா உலகங்களையும்.

42. **ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்**
படைப்பாய், பாதுகாப்பாய், ஒடுக்குவாய், முடிவில் உயிர்கட்டு அருள்பாலிப்பாய்.

43. **போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்**
என்னை அப்பல்வகைப் பிறவிகளிற் செலுத்திப் போகங் களில் மூழ்கச் செய்வாய், பின்னர் என்னை நின் திருவடித் தொண்டில் ஈடுபடும்படி அருள்செய்வாய்.

44. **நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே**
பூவில் மணம்போல இருப்பவனே, அன்பரல்லாதவர் உணராமையின் தூரத்தில் இருப்பவனே, அன்பர் உணர்தலின் அண்மித்திருப்பவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. **மாற்ற மனங்கழிய நின்ற மறையோனை**
சொல்லுக்கும், மனத்திற்கும் அப்பாற்பட்ட நின்ற மறைபொருளாயுள்ளவனே.

46. **கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
பசுவிற் கறந்த பால் சர்க்கரையோடு தேனும் கலந்தால் எப்படி இருக்குமோ அப்படி.

47. **சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று**
சிறப்புற்று அடியவர்களது சிந்தனையில் தேன் போல் இனிமை ஊற்றெடுக்குமாறு நிலை பெற்றுத் தங்கி.

48. **பிறந்த பிறப்பறுக்கும் மெங்கள் பெருமான்**
அவ் அடியவர் எடுத்த பிறவியை நீக்கும் எங்கள் சிவபெருமான்.

49. **நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர் களேத்த**
பொன்மை, வெண்மை. செம்மை, கருமை, புகைமை என்னும் ஐந்து நிறங்களை உடையவனே தேவர்கள் உன்னைத் துதிக்கவும்.

50. **மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை**
அவர்களிற்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே, எம் பெருமானே வலியவினை வசப்பட்டவனாகிய என்னை.

51. **மறைந்திட மூடிய மாய விருளை**
அறிவு மறையும்படி மூடிய ஆணவ மலமாகிய இருளை

52. **அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்**
நல்வினை, தீவினை என்னும் அரிய வலிய கயிறுகளால் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. **புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி**
வெளியே தோலைப் போர்த்து, அதனால் உடம்பெங்கு முள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மூடியுள்ள.

54. **மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை**
அழுக்குகள் கழிகின்ற ஒன்பது வழிகளையுடைய உடம்பாகிய குடிசை

55. **மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய**
கலங்கும்படி ஐம்புலன்களும் வஞ்சனையையே செய்ய.

56. **விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்**
அவற்றிலிருந்து விலகும் மனங்கொண்ட காரணத்தில் நிர்மலனே உன்னிடத்துக்

57. **கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்**
கலந்த அன்புடையேனாகி நெகிழ்ந்து மனம் உருகும்.

58. **நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி**
நன்மை இல்லாத சிறியேனுக்கு அக்குடிசையினைத் தந்து

59. **நிலத்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**
இந்நிலவுலகத்தே குருவடிவில் எழுந்தருளி வந்து எல்லையற்ற பெருமை பொருந்திய திருவடிகளைக் காட்டியருளி.

60. **நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
நாயினும் கீழ்ப்பட்டவனாகக் கிடந்த அடியேனுக்கு

61. **தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**
தாயினும் சிறந்த கருணைவடிவான உண்மைப் பொருளாயுள்ளவனே.

62. **மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே**
களங்கம் இல்லாத ஒளி விரிந்த மலரின் ஒளி போன்றவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. **தேசனே தேனா ரமுதே சிவபுரனே**
குரு முதல்வனே, முதன்மை பொருந்திய அமுதம் போன்றவனே சிவபுரத்து இறைவனே.

64. **பாசமாம் பற்றுத்துப் பாரிக்கு மாரியனே**
ஆணவம், கன்மம், மாயை என்னம் மும்மலங்களின் பிணிப்பினை அழித்து மெய்யறிவினை வளர்க்கும்.

65. **நேச வருள் புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட**
நின்னிடத்தில் அன்பு வைத்தற்குரிய அருளைத் தந்து, என் மனத்திலுள்ள பொய்மையாகிய குற்றங்கள் அற்றுப்போக.

66. **பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே.**
என் மனத்தினின்றும் நீங்காது நிலை பெற்று நின்ற பெரிய கருணையாகிய பெரிய ஆறாக உள்ளவனே.

67. **ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே**
தெவிட்டாத அமுதம் போன்றவனே, எல்லை இல்லாத இயல்பினையுடைய பெருமானே.

68. **ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே**
நின்னை உணர்ந்து கொள்ளாதவரின் உள்ளத்தில் வெளிப்படாது மறைந்திருக்கும் ஒளி வடிவானவனே.

69. **நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே**
என் மனதை நீர்போல் உருகச் செய்து என் அரிய உயிருக்கு உயிராய் நின்றவனே.

70. **இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே**
இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டும் இல்லாதவனே, அடியவர்களிற்காக இன்பமும் துன்பமும் உள்ளவனே.

71. **அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்**
அன்பருக்கு அன்பாக அருள் செய்பவனே, எல்லாப் பொருள்களுமாகி, அவையல்லாத வேறுமாகியும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. **சோதியனே நுண்ணிருளே தோன்றாப் பெருமையனே**
ஒளி பொருந்தியவனே, நெருங்கிய இருளை உடைய வனே, யாருக்கும் புலனாகாத பெருமை உடையவனே.

73. **ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே**
எல்லாவற்றிற்கும் முதலாகியிருப்பவனே, முடிவும், நடுவும், ஆக, ஆதியும் அந்தமும் நடுவும் அல்லாதவனுமாய் இருப்பவனே.

74. **ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே**
என்னை வலியவந்து கவர்ந்து அடிமை கொண்டருளிய எமது தந்தையாகிய பெருமான்.

75. **கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங் கருத்தின்**
கூரிய மெய்ஞ்ஞானமாகிய அறிவின் துணைகொண்டு உணர்பவர்களது கருத்தினால்.

76. **நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே**
அறிதற்கரிய கருத்துப் பொருளே, நுணுகி உணர் வதற்கும் அரிய நுண்ணிய உணவுக்பொருள்

77. **போக்கும் வரவும் புணர்மிலாப் புண்ணியனே**
போதலும், வருதலும், பொருந்தி இருத்தலும் இல்லாத புண்ணிய முதல்வனே.

78. **காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே**
எல்லாவற்றையும் காக்கும் எம் அரசனே, எல்லை காண அரிய பேரொளி வடிவினனே.

79. **ஆற்றின்ப வெள்ளமே ஆத்தாமிக் காய்நின்ற**
இன்ப ஆற்றின் வெள்ளம் போன்றவனே, அப்பனே, யாவற்றிலும் மேம்பட்ட நிலையில் நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. **தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்**
தோற்றத்தினுடைய பிரகாசிக்கும் ஒளியாகியும், சொல்லுதற்கியலாத நுண்ணிய உணர்வாகியும்.

81. **மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்**
மாறுபாட்டினையுடைய இவ்வுலகத்தில் உயிர்களிற்கு வெவ்வேறு நிலமையில் வந்து அருள் செய்தலால் அறியப்படும்.

82. **தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்**
தெளிபொருளாகியுள்ளவனே, தெளிவினிற் தெளிவே யாவற்றையும் உடையவனே

83. **ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே**
ஊற்றாச் சுரக்கின்ற உண்ணற்கினிய அரிய அமுதே, யாவற்றையும் உடையவனே.

84. **வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப**
வெவ்வேறு மாறுபாடுகளை உடைய, விடம் பொருந்திய ஊன் உடம்பினுள்ளே கிடக்கத்

85. **ஆற்றேனெம் ஐமயா அரனேயோ வென்றென்று**
தாங்கமாட்டேன், எமது தலைவனே, அரசனே, ஓ என்று பல தடவை ஓலமிட்டு அழைத்து

86. **போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்**
வணங்கிப் புகழ்ந்து தொண்டராயிருந்து, பொய்மையான நினைவு, சொல், செயல்களெல்லாம் அழிந்து மெய்த் தொண்டரானவர்.

87. **மீட்டிங்கு வந்து வினைபிறவி சாராமே**
திரும்பவும் இவ்வுலகத்தில் வந்து வினைகளுக்கு இடமாகிய பிறவியில் பொருந்தாமல்

88. **கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே**
வஞ்சகத் தன்மை பொருந்திய புலன்களின் வழிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் ஐம்பொறிகளின் வீடாகிய, எடுத்த உடம்பின் பந்தத்தினை அழிக்க வல்லவனே.

**89. நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே**
உலகம் முழுவதும் அழிந்து போய் ஏற்படுகின்ற செறிந்த இருளிலே திருக்கூத்தினைப் பலகாலும் ஆடுகின்ற தலைவனே.

**90. தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டனே**
தில்லைச் சிற்றம்பலத்திலே கூத்தாடுபவனே, தெற்கே அமைந்திருக்கும் பாண்டிநாட்டை ஆட்சிசெய்து, திருவிளையாடல் புரிந்து இருப்பிடமாகக் கொண்டவனே.

**91. அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று**
துன்பந்தரும் பிறவிப் பிணியினை அழிப்பவனே, ஓவென்று அழைத்து முறையிட்டு

**92. சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்**
சொல்லிப் பாராட்டுதற்கும் அரிய பெருமை கொண்டவனை, இயன்ற மட்டும் பாராட்டி, திருவடியின் கீழிருந்து யான்.

**93. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
பாடிய பாடல்களின் பொருளுணர்ந்து ஓதவல்லவர்கள்.


**94. செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்**

**95. பல்லோரு மேத்தப் பணிந்து.**
(சிவபுரத்தின் உள்ளார் பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவனடிக் கீழ்ச் செல்வர்) சிவபுரத்திலுள்ள சிவகணத்தவர் பலரும் பணிந்து வணங்கித் துதிக்க சிவன் திருவடிக்கீழ் சென்று இன்புற்றிருப்பர்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிங்காஷ்டகம்

தஸ்மை நம; பரமகாரண காரணாய
திப்தோ ஜிவல ஜிவலித பிங்கல லோச்சனாய
நாகேந்த்ர ஹரக்ர்த குண்டல பூஷணாய
ப்ரமேந்திர விஷ்ணு வரதாய நமசிவாய.

1. பிரம்ம முராரி சுரார்சித லிங்கம்
நிர்மலபாஷித சோபித லிங்கம்
ஜென்மஜதுக்க விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

2. தேவமுனிப்ர வரார்ச்சித லிங்கம்
காமதஹ (ன)ம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

3. ஸ்ர்வ சுகந்தி ஸுலே பித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

5. குங்கும சந்தன லேவித லிங்கம்
பங்கஜஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

6. தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

7. அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.

8. ஸுர குரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்.
(பிரம்ம முராரி)

லிங்காஷ்டக மிதம் புண்யம்
ய: படேச்சிவ சன்னிதௌ
சிவலோக மவாப்னோதி
சிவேன ஸஹ மோததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்
# (பொருள்)

1. அயன – அரிதேவர் அருச்சிக்கும் லிங்கம்
துய்ய ஒளிச்சுடர் துலங்கும் லிங்கம்
பிறவித் துயரை யழித்திடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

2. தேவரும் முனிவரும் சேவிக்கும் லிங்கம்
காமனை எரித்துக் கருணைசெய் லிங்கம்
இராவணன் செருக்கை யழித்த லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

3. கமகம நறுமணம் கமழும் லிங்கம்
புத்தியை வளர்த்திடும் பூரண லிங்கம்
சித்தர் சுராசுரர் சேவிக்கும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

4. பொன்மணி மாலை பொலிந்திரு லிங்கம்
அரவணி இலகிடும் அழகிய லிங்கம்
தக்கனின் வேள்வியைத் தகர்த்திடு லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

5. குங்குமம் சந்தனம் குலவிய லிங்கம்
பங்கய மாலை பளிச்சிடு லிங்கம்
சஞ்சித பாபத்தை நீக்கிடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தேவகணங்கள் வணங்கிடு லிங்கம்
பாவிக்கும் பக்தரைப் பாலிக்கும் லிங்கம்
கோடி சூரியப்ர காசமாம் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

7. அஷ்ட தனத்தை யணிந்திடும் லிங்கம்
அனைத்தையும் ஆக்கிடும் அற்புத லிங்கம்
அஷ்ட தரித்திரம் போக்கிடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

8. சற்குரு சுரவரர் தொழுதிடும் லிங்கம்
சுரவன மலரென்றும் தூவிடும் லிங்கம்
பராத்பர பரமாத்மக மாம் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்.

இலிங்காட்டகமிதை இலிங்க சந்நிதியில்
இசைத் திடும் அன்பர்கள் இன்பசிவத்தை
அடைவார் சிவசா யுச்சியம் பெறுவார்
சிவபோகானந்தச் சிலிர்ப் புறவாழ்வார்.

*– மகிரிஷி கவியோகி சுத்தானந்தர் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவராய சுவாமிகள்

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை வருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபினி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன்கனிமுகங்கண்ட நல்
கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 1

கானுறு மலரெனக் கதிர்ஒளிகாட்டி
காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரி சௌந்தரி சதுர் முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்த நல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 3

தணதண தந்தன தவிலொலி முழங்கிட
தண்மணி நீவருவாய்
கண கண கங்கண கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 4

பஞ்சமி பைரவி பர்வதபுத்திரி
பஞ்ச நல்பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல் குமரியளே
சங்கடம் தீர்த்திட சமரது செய்த நற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியபடி நீயருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளியதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர் தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்
படர் தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 7

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருமாரியம்மன் தோத்திரம்

கற்பூரநாயகியே! கனகவல்லி
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னைநீயே.
(கற்பூர) 1

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீ யாதரி.
(கற்பூர) 2

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ – அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல் கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழிஅனுப்பு!
(கற்பூர) 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா.
(கற்பூர) 4

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெலாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!
(கற்பூர) 5

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணு க்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!
(கற்பூர) 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சகத்தை என்னெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்.
(கற்பூர) 7

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடத்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை.
(கற்பூர) 8

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.
(கற்பூர) 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்குமக்கவசம்

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினைத் தீர்ப்பது

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென் றோரைத் தடுத்தாட் கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபயமளிப்பதும்
காஞ்சி காமாக்ஷி கருணைக் குங்குமம்

நற்பத மீவது நாரணிக் குங்குமம்
பொற்பிணை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பர மாவது ஸ்ரீசக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைக் குங்குமம்

செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாக்ஷி கனிவாம் குங்குமம்

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்த தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாக்ஷி மங்கலக் குங்குமம்

சிவசிவ என்றுமே திருநீறணிந்த பின்
தவமான மேலோருந் தரித்துக் களிப்பதும்
சிவகாமி யேஎன சிந்தித் தணிவதும்
பவவினைத் தீர்ப்பதும் பராசக்தி குங்குமம்

எவையெவை கருதிடின் அவையவை யீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிடட பேருக்கு
குவிநிதி யீவதும் குலநலக் குங்குமம்

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டிரண்டோர் அறிவித்தோர் வீடினைக்
கிட்டவே செய்வதும் கேண்மைக் குங்குமம்

பட்ட காலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டி டாமலே வந்து வாட்டினும்
பட்டான பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் இடர்தவிர்க்கும் இனிய குங்குமம்

சித்தந்தனைச் சுத்தி செய்வதர்க் கெளியதோர்
எத்துத் தெரியாதே ஏமாந்த மாந்தரே!
நித்தம் தொழும் அன்னை குங்குமம் தன்னை
நித்தியம் தரித்துமே மேன்மை அடைவோம்

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர் ஆகுமோர் ஸ்ரீ சக்கரம் ஈஸ்வரியின்
கஞ்சமலர் முகம் தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் பண்புக் குங்குமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யஜா மஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

***பொருள்:***

நறுமணம் மிகுந்தவரும் எல்லா ஜீவன்களுக்கும் புஷ்டி அளிப்பவரும் முக்கணனுமான சிவபெருமானைப் பூஜிக்கின்றோம்; வெள்ளரி தன் கொடியினின்றும் விடுவிக்கப் படுவதுபோல் அமரத்துவத்தின் பொருட்டு அன்னவர் நம்மை மரணத்தினின்றும் விடுவிப்பாராக.

***நன்மைகள்:***

இந்த மகா மிருத்யுஞ்ஜய மந்திரம் ஓர் உயிர் வழங்கும் மந்திரம். இந்நாட்களில் நம் உயிர்க்குப் பல வகைகளில் எதிர்பாராத நிலையில் இன்னல்கள் ஏற்படுகின்றன. இம்மந்திரம் பாம்புக்கடி, மின்னல், மோட்டார் விபத்துக்கள், தீ விபத்து, சைக்கிள் விபத்து, வெள்ளம், விமானவிபத்து முதலிய எல்லா விபத்துக்களாலும் மரணம் ஏற்படுவதைத் தடுக்கிறது. மேலும் இதற்கு நோய் நிவர்த்திக்கும் சக்தியுண்டு, தவிரவும், உண்மையோடும் நம்பிக்கையோடும் உச்சரித்தால் மருத்துவ வல்லுனர்களால் தீராது என்று கைவிடப்பட்ட பிணிகளும் போக்கப்படுகின்றன. இம் மந்திரம் வியாதிகளை நீக்கும் ஆயுதம்: மரணத்தை வெல்லும் மந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHA MRITUNJAYA MANTRA

Om Tryambakam yajamahe
Sugandhim pushtivardhanam
Urvaarukamiva bandhanat
Mrityormuksheeya maamritat.

***MEANING:***

We worship the three - eyed One (Lord Siva) who is fragrant and who nourishes well all beings; may He liberate us from death for the sake of Immortality in the same way the cucumber is severed from its bondage (the creeper).

***BENEFITS:***

This Maha Mrityunjaya Mantra is a life giving Mantra. In these days, when Life is very complex and accidents, are an everyday affair, this Mantra wards off death by snake - bite, Lightning, motor - accidents, fire - accidents, cycle - accidents, water - accidents, air - accidents and accidents of all description. Besides it has a great curative effect. Again dieseases pronounced incurable by doctors are cured by this Mantra, when chanted with sincerity, faith and devotion. It is a weapon against disease. It is a mantra to conquer death.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தி மந்திரங்கள்

ஓம் ஸர்வேஷாம் ஸ்வஸ்திர் பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வோம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது

ஸர்வே பவந்து ஸுகின
ஸர்வே ஸந்து நிராமயா!
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கஸ்சித் துக்க பாக்பவேத்
அஸதோ மா ஸ்த்கமய
தமசே ஸா மா ஜ்யோதிர்கமய!
ம்ருதயோர்மா அம்ருதங்கமய

ஓம் பூர்ணமத; பூர்ண மிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவா அவசிஷ்யதே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தி மந்திரங்கள் - பொருள்

1. உலக மெல்லாம் உயர் நலம் பெருகுக!
அகில மெங்கும் அமைதி நிலவுக!
பாருலகெங்கும் பூரணம் பொலிக!
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

2. எல்லா வுயிர்களும் இன்புற வாழ்க!
எல்லாருக்கும் குறைகள் நீங்குக!
எல்லாருக்கும் நல்லதே வளர்க!
துன்பமே யின்றித் தொல்புவி வாழ்கவே!

3. எங்கள் வாழ்க்கை, இறைவ! நின்னருளால்
அசத்தி னின்று சத்திற்குயர்க
சாவினின்று அமரத் தன்மைக்குயர்கவே!

4. அதுவும் பூரணம் இதுவும் பூரணம்
பூரணத்திற் போந்தது பூரணம்
பூரணத்திற் பூரணம் எடுத்தும்
நிற்பது பூரண நிறைவாம் ஒன்றே!

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHANTI MANTRAS

Om Sarvesham svastir bhavatu
Sarvesham shantir bhavatu,
Sarvesham purnam bhavatu,
Sarvesham mangalam bhavatu.

Sarve bhavantu sukhinah
Sarve santu niramayah
Sarve bhadrani pashyantu
Ma kaschit-duhkha-bhag-bhavet
Asato ma sat gamaya,
Tamasoma jyotir gamaya.
Mrityor ma amritam gamaya.

Om purnamadah purnamidam
purnat purna mudachyate
purnasya purna madaya
purna mevaavasishyate.

Om Shanti! Shanti! Shanti!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHANTI MANTRAS
## (MEANING)

May auspiciousness be unto all;
May Peace be unto all;
May fullness be unto all;
May prosperity be unto all;

May all be happy;
May all be free from disabilities
May all look to the good of others;
May none suffer from sorrows

Lead me from the unreal to the Real;
Lead me from darkness to Light;
Lead me from death to Immortality.

Om! May we realise that the invisible Reality is whole,
And the seeming universe too is whole;
And though the projected universe is from that Reality,
The Whole remains whole.

Om Peace: Peace: Peace:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSAL PRAYER

O Adorable Lord of Mercy and Love!

Salutations and prostrations unto Thee.

Thou art Omnipresent, Omnipotent, Omniscient;

Thou art Satchidananda, (Existence, Knowledge, Bliss)

Thou art the Indweller of all beings.

Grant us an understanding heart,

Equal vision, balanced mind,

Faith, devotion and wisdom

Grant us inner spiritual strength

To resist temptations and to control the mind

Free us from egoism, lust, greed, anger and hatred.

Fill our hearts with divine virtues.

Let us behold Thee in all these names and forms.

Let us serve Thee in all these names and forms.

Let us ever remember Thee.

Let us ever sing Thy glories.

Let Thy Name be ever on our lips.

Let us abide in Thee for ever and ever.

*-Swami Sivananda-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தரின் அரிய போதனைகள்

01. உன்னுடைய கடமைகளை உண்மையாகச் செய், உரிமைகள் கேட்காமலே உடன் வரும்.

02. ஒரு மனிதனுடைய சொல்லின் உண்மையைச் செயலில் சோதி.

03. மனிதனுக்கு பட்டங்கள் தேவையில்லை, ஆனால் ஒழுக்கம் வேண்டும். மேற்படிப்பு வேண்டாம். ஆனால் அறிவு வேண்டும்.

04. உனக்கு வெளியில் எதிரிகள் இல்லை. உனது உண்மையான எதிரிகள் அகங்காரம், பொறாமை, பேராசை, கோபம், மனோவிகாரம், சுயநலம் முதலியவை.

05. கோபத்தை அன்பினாலும் ஆசைகளைத் தூய்மையினாலும் பேராசையைத் தாராள மனப்பான்மையினாலும், கர்வத்தைப் பணிவாலும், அகங்காரத்தை இறைவனது சரணாகதியினாலும் வெற்றி கொள். உன்னிடம் இறைமை மிளிரும்.

06. ஒரு தடவை சந்தர்ப்பத்தை இழக்கவிட்டாயானால் மறுமுறை அதைப் பெறுவது அரிது.

07. சாந்தமாக ஆனால் உறுதியாக, மிருதுவாக, ஆனால் துணிச்சலாக, பணிவாக ஆனால் தைரியமாக, எளிமையாக ஆனால் கண்ணியமாக இரு.

08. உறுதியானதும் நன்கு தீர்மானித்ததுமான முயற்சியைச் செய். நீ வெற்றியடைவாய். முழு முயற்சி – முழு வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அன்பு உரிமைகளைக் கோருவதில்லை, அது அள்ளிக் கொடுக்கிறது. அது வருத்தப்படுவதுமில்லை. பழி வாங்க நினைப்பதுமில்லை.

10. ஒவ்வொரு மனிதனும் தேடும் உண்மையான நிலையான சந்தோஷம், உலகப் பொருள்களில் இல்லை. அந்த ஆனந்தத்தை உன் நெஞ்சில் உள்ளே இருக்கும் ஆத்மனைத் தியானிப்பதில் அடையலாம்.

## நம் சிந்தனைக்கு

- நீ எதை நினைக்கிறாயோ அதுவே நீ ஆகிறாய்.
- சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும்.
- உலகம் இருந்தாலும் சரி, அழிந்தாலும் சரி நீ உன் கடமையை மறக்காதே.
- நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன் பின்னால் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச் செல்.
- பிறருடைய பாராட்டுக்கும், பழிக்கும் செவிசாய்த்தால், மகத்தான காரியம் எதனையும் செய்ய முடியாது.
- உடல் பலவீனத்தையோ, மனப்பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் நீ அணுகாதே.
- நீ அறிந்தாலும், அறியாவிட்டாலும் உன்னுடைய ஆன்மாவில் எல்லையற்ற சக்தி உள்ளது. அதை நீ உணரும் போது திறத்தை பொறுத்தே அது வெளிப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள். உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்துகொள்.
* தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும்.
* உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக்கூடாது.

***- சுவாமி விவேகானந்தர் -***

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகக் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | பொறாமை |
| நம்பப் கூடாதது | வதந்தி |
| ஆபத்து விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | உபதேசம் |
| செய்ய வேண்டியது | உதவி |
| விலக்க வேண்டியது | விவாதம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | வாய்ப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# நன்றி நவிலல்

12-07-2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது அம்மா மகேஸ்வரி நல்லதம்பி அவர்களின் பிரிவால் துயருற்ற எமக்கு ஆறுதல்கூறி நேரிலும், தொலைபேசி, கடிதங்கள் மூலமும், மலர் வளையங்கள் அனுப்பியும் துயர்பகிர்ந்த எம் அன்பின் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல வகைகளிலும் உதவி செய்தவர்களுக்கும் இம்மல(ரை வெளியிடு வதற்கு உதவிய அனைவருக்கும் எங்கள் மனமு வர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*வணக்கம்*

*அன்புடன்*

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

***சந்திரா, N. சிவானந்தன் அஞ்சனா,***
***பரந்தா, A. மகேந்திரராசா, லாவண்யா,***
***ஹரி, ராணி, அனுஷ்கா, லக்ஷிகா,***
***குமார், தாரணி, சுகன்யா.***

***8/1, மெயிட்லண்ட கிறசன்ட், கொழும்பு - 07.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: Luxmi Printer - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org